A COLLECTION OF OFFICIAL DOCUMENTS IN THE TAMIL LANGUAGE,

CONSISTING OF URZEES AND OTHER PAPERS FILED IN COURTS OF JUSTICE,

FOR THE USE OF CANDIDATES FOR THE INDIAN CIVIL SERVICE.

COMPILED BY ORDER OF THE
RIGHT HONORABLE THE SECRETARY OF STATE FOR INDIA.

BY
LIEUT. W. F. WRIGHT,
MADRAS STAFF CORPS, TAMIL TRANSLATOR TO THE GOVERNMENT OF MADRAS.

MADRAS:
PRINTED FOR THE GOVERNMENT OF MADRAS,
BY CALEB FOSTER,
AT THE FOSTER PRESS, 23, RUNDALL'S ROAD, VEPERY.
1868.

INDIAN INSTITUTE
2 JUN.
OXFORD

MAGISTERIAL PAPERS.

No. 1

தெனாற்க்காடு சபா மாஜிஸ்திரேட்டாராகிய மெஸ்தர்

ஜீ. டபிளியு ரீட் துரையவர்கள் சமுகத்துக்கு.

விழுப்புரம் தக்குடி முதலாவது வகுப்பு சபார்டுநேட்டு

மாஜிஸ்திரேட்டு குழந்தை வேலுபிள்ளை எழுதிக்கொண்ட அர்ஜி.

நாளது வருஷம் ஜனவரிமாசமுதல் ஜான் மாசம் ஆகர்

வரையில் நடந்த கூட்டகொள்ளை வழிப்பறி இதுகளின் தபசீ

ல் கணக்கும் ஸ்டேட்டுமெண்டும் தயார் செய்வித்து அந்தக

நா. உ. யும் இதிலடக்கமாய சமுகத்துக்கு ரவானா செய்திருக்

கிறேன்.

1866 வருஷம்

ஜூலைமாசம் 8

கஸ்பாவிழுப்புரம் தங்கள் விதேயன்

No. 2.

தெனாற்க்காடு சபா மாஜிஸ்திரேட்டாராகிய மெஸ்

தர். சீ. டபிளியூ ரீட்துரையவர்கள் சமுகத்துக்கு.

விழுப்புரம் தாலூகா முதல்வகுப்பு சபார்டுனேட்டு மாஜிஸ்திரேட்டு. ம. குழந்தைவேலு பிள்ளை மிகவும் வணக்கமாயெழுதிக்கொண்ட அர்ஜி யென்னவென்றால்.

நாளது வருஷத்திய காலண்டர் நவம்பர் 10ல் தாக்கலான குற்றவாளி கிஷ்ணன் நாளது வருஷம் ஏப்ரல் மாசம் 14௳ ராத்திரி சுமார் 10 மணிக்கு கோலியனூர் ரோட்டுக்கு ருகாமையிலிருக்கிற தென்னந்தோப்பில் விட்டிருந்த வண்டியிலிருந்த வாதி திருவேங்கடத்துடைய ரூபாய் 10-"-" பெறுமான வெள்ளை சரிகை போட்ட தலைக்குட்டை யொன்றை களவு செய்ததாக இந்தியன் பினல் கோட் 379 வது செக்ஷன்படி குற்றம் ஸ்தாபகமாய், மேற்படி குற்றத்திற்காக. கஅசாசா. வருஷத்திய VI வது ஆக்டு I வது செக்ஷன் முதலாவது கிளாசுபடிக்கு மேற்படி குற்றவாளி முதுகில் ஒன்பது வார் கசையினால் இரண்டு டசனடிக்கும்படி நான் தீர்ப்பு செய்து, இன்றையத்தினம் சாயங்கிரம் 4. மணிக்கு கஸ்பா விழுப்புரம் பஜார் கடை வீதியில் என்முன்பாக

மேற்படி தீர்மானத்தை. கீழே வேறே நாலாவாளியை விடுதலை

செய்திருக்கிறேன். இது விவரம் சமுகத்துக்கு அறிக்கையாக

மனுவு செய்து கொண்டேன்.

1865 வருஷம்

ஜூன் மாசம் 8ௗ

கல்பாவிழுப்புரம் — தங்கள் விதேயன்

No. 3.

தென்னார்க்காடு சுபா மாஜிஸ்திரேட்டாகிய F. டப்பிளியு ரீட்துரையவர்கள் சமுகத்துக்கு.

கூடலூர் தாலூகா. 2. வது கிளாசு சப்பார்டினேட் மாஜிஸ்திரேட்டு கோவிந்தராயர் எழுதிக்கொண்ட அர்ஜி.

அக்கூடி மஜ்கூரைசேர்ந்த திருவந்திபுரம் நாராயண படையாச்சியினுடைய கல்கட்டுகோப்புவீட்டின் தோட்டத்து பக்கத்துச்சுவரில் தென்னங்கீத்தினால் போட்டிருந்த ஜாகையில் நாளதுமாசம் 3ௗ இராத்திரி. 11. மணிக்கு தெயலகதியாய தீப்பட்டுவெந்து விட்டதாயும் அதிலேமே

ற்படி வீட்டுக்காரனுக்கு ரூபாய்.௪. சேதம் நேரிட்டிருப்
பதாயும் மேற்படி கிராமம் வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு எ
ழுதிய ரிபோர்ட்டும் மேற்படி நாராயண படையாச்சியி
னுடைய வாக்கு மூலமும் இதிலடக்கம் செய்து பார்வை
யிடும்படி யனுப்பியிருக்கிறேன்.

மேற்படி நாராயண படையாச்சியை விசாரித்ததில் அ
வன் நாளது மாசம். ௩.~ ராத்திரி படுத்துக் கொண்டிருக்கும்
போது மேற்படி ஜாகை பற்றிக் கொண்டு எரிகிற வெளிச்ச
ந் தெரிந்து தான் கூச்சல் போட்டதாயும் அதைக்கேட்டு
அக்கம் பக்கத்து சனங்கள் உடனே வந்து அதை அவி
த்துப் போட்டதாயும் மேற்படி ஜாகை முக்கால் வாசி
எரிந்து போய்விட்டதாயும் அதினால் தனக்கு ரூபாய்.௪.
பெறுமான சாமான்கள் சேதப்பட்டு போனதாயும், மேற்ப
டி ஜாகை தெய்வகதியாய் தீப்பட்டதேதவிர ஒருவருடை
ய செய்கையினால் நேரிட்டதல்லவென்றும் அந்தவிஷ
யத்தில் தனக்கு யார் பேரிலும் சந்தேகமில்லையென்றும்
சொல்லுகிறான் சங்கதி சித்தமறியலாவதாய மனுவு செய்து

கொண்டேன்.

1866 வருஷம்

ஜனவரிமாசம் 30உ

புதுப்பாளையம்.   தங்கள் விதேயன்

No. 4.

தெனார்க்காடு சபா மாஜிஸ்திரேட்டாகிய. ஸ்ரீ
டபிளியூ. ரீட்துரையவர்கள் சமுகத்துக்கு

கூடலூர் தக்கூடி: 2. வது கிளாசு சபார்ட்டு நேட்
டு மாஜிஸ்திரேட்டு கோவிந்தராவு எழுதிக்கொண்ட அர்ஜி

தக்கூடி மஸ்கூர் தாக்கல் ஆர்துபபம் கிராம
த்தில் ராமசாமி நாயக்கன். (க) ராமலிங்க நாயக்கன் (உ) இவ
ர்கள் வீட்டில் நாளது மாசம். 2உ. இராத்திரி சுமார். 20. பேர்
தீவட்டி தத்திருடர்கள் பிரவேசித்து களவு நடக்கையில்
மேற்படியூர் வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு வகையரா ஜனங்
கள் சேர்ந்து இரைச்சல் போட்டதின் பேரில் வீட்டுக்குளி
ருந்த திருடர்கள் ரூபாய். 21. 8 - பெறுமான சொத்து

களை களவு செய்து போனதாகவும் பின் தொடர்ந்து போன தில் திருடர்கள் அகபபடவிலலை யெனறும் மேற்படியூர் வில லேஜ் மாஜிஸ்திரேட்டு எழுதிய ரிபோர்ட்டு நாலாது தேதியில் கா லமே வந்து சேர்ந்தது அந்த சங்கதியை விசாரணை செயயு மபடி பிதிவி உடனே மேற்படியூருககுபபோகிறேன். விசாரித து கிரமபபடி நடந்து கொளளுகிறேன் சித்தமறியலாவதா ய மனுவு செய்து கொண்டேன்

1865 வருஷம்

ஜனவரிமாசம் 6 உ

புதுப்பாளையம் — தங்கள் விதேயன்.

No. 5.

தென்னார்க்காடு சுபா மாஜிஸ்திரேட்டாரவர்களாகி ய மெஸ்தர் ஜீ. டபிளியு ரிட்சுரையவர்கள் சமுகத்துக்கு

விழுப்புரம் தாலூகா முதலாவது வகுப்பு சபார்டி னேட்டு மாஜிஸ்திரேட். ம. தியாகநாத வேலுபிளளை மிகவும் வ ணககத்துடனே சலாம் செய்து எழுதிக்கொணட அர்ஜி).

யென்ன வென்றால்.

நாளது வருஷத்திய ரிஜிஸ்தர் நம்பர். 6. ல் தாக்கலான குற்றவாளி ஸ்ரீனிவாச உடையான் அல்லது சீனப்புடையான் வகைறாக்கள் பேரில் இந்தியன் பினல் கோட் 468. 419. 114. இந்த செக்ஷன்களின்படி மோசஞ்செய்யும் பொருட்டு ஆள்மாறாட்டமாய் சிருஷ்டனை செய்ததாகவும் உடந்தையா யிருந்ததாகவும் குற்றம்ஸ்தாபகமாய மேற்படி குற்றவாளிகள் 6. பேரையும் செஷன் கோர்ட்டாரவர்களுடைய பரிசீலனைக்காக நாளது தேதியில் கமிட்டு செய்திருக்கிறேன் ஆகையால் அதைச் சேர்ந்த ரிஜிஸ்தர் குற்றபத்திரிகை வாக்குமூலம் வகைறாக்களுக்கு நகல் தயார் செய்து மேற்படி கதா. 12. யும் இதிலடக்கஞ் செய்தனுப்பி யிருக்கிறேன் பப்ளிக் பிராசிக்யூட்டரை யேற்படுத்த வேண்டியதைக் குறித்து அநுக்கிரகத்திற்கிசைகையாக யுத்தரவு செய்து கொள்ளவேண்

1865 வருஷம்

மே மாசம். 20உ

கம்பா விழுப்புரம் தங்கள் விதேயன்

No. 6.

தென்னார்க்காடு சுபா மாஜிஸ்திரேட்டாராகிய மெஸ்தர் ஜார்ஜ் பான்புரி துரை யவர்கள் சமுகத்துக்கு.

கூடலூர் தக்குடி .2. வது டிப்புடி சபார்டிநேட்டு மாஜிஸ்திரேட்டு கோவிந்தராயர் எழுதிக்கொண்ட அர்ஜி யென்னவென்றால்

இத்தக்குடி மங்களூர் தாக்கல் அனுக்கப்பட்டியிலிருக்கும் பொன்னம்மாள் வீட்டில் சென்ற செப்டம்பர் மாசம் 14ᵃ சாயந்திரம் .6. மணிக்கு ரூ 1. 8 -. பெறுமான சொத்துகள் களவு போனதாக ஜோனகன் சாவடி ஷ்டேஷன் அதிகாரி அனுப்பிய .14. நம்பர் சார்ஜ்பட்டி .௧. முச்சிலிக்கா. ௨. ஆக. ௩. யும் இதிலடக்கத் செய்திருக்கிறேன் இது சங்கதியும் இந்த களவு அவ்விடத்து விசாரணைக்குட்பட்டதா யிருக்கிறதும் தெரியலாவதாய் மனு செய்து கொண்டேன்.

1865 வருஷம்

அக்டோபர் மீ 8ᵃ

தங்கள் விதேயன்.

No. 7.

தென்னார்க்காடு சுபா மாஜிஸ்திரேட்டா
ராகிய மெஸ்தர் ஜி. டபிளியு ரிட்சார்டையவர்க
ள் சமுகத்துக்கு.

கூடலூர் தாலுகா 2- வது கிளாஸ் சப்
மாஜிஸ்திரேட்டு ஆத்மநாத முதலியார் எழுதிக்கொ
ண்ட அர்ஜி.

இன்றையதேதியுள்ள 83. நம்பர் தங்கள் உ
த்தரவை சேர்ந்து பார்த்துக்கொண்டேன்

அதில் கண்ட படி கக்ஷிக்காரர்கள் ஆஜரா
க வேண்டியதற்கு பிராசஸ்கள் அனுப்பப்பட்டிருக்கி
ற பிராதுகளில் அனைத்தும் மேற்படி பிராதுகளி
ன் நடவடிக்கை விளங்கக்காட்டும் படி யென்றும் அ
னுப்பி யிருக்கிறேன விசாரணைக்காகத்திருக்கும். 161.
நம்பர் கேசைச் சேர்ந்த நபர்களையும் பிராதையு
ம் இத்துடன் அனுப்பி யிருக்கிறேன்.

1865ளு மேமீ 29உ

முகாம் கம்பம்.   தங்கள் விதேயன்.

No. 8.

தென்னார்க்காடு ஜில்லா மாஜிஸ்திரேட்டாரவர்களாகிய மெஸ்தர். சீ. டபிலியு நீடதுரையவர்கள் சமுகத்துக்கு.

கூடலூர் தாலூகா உளுந்து ... சபார் டடி கேட்டு மாஜிஸ்திரேட்டு கோவிந்தராயர் எழுதிக்கொண்ட அர்ஜி.

தாலூக்காவில் நாகலாயிருக்கிற பேவாரிசு சாமான்களுக்கு பட்டி அனுப்பும்படியாய் வெட்ட தாலூகா மாஜிஸ்திரேட்டு போனால் சமுகத்திலிருந்து வந்திருந்த உத்தரவு சர்க்குலர்படியிருக்கிறதைப் பார்வையிட்டுக்கொண்டேன்.

சென்ற 1864 ௵த்தில் பேவாரிசாய தாலூக்காவில் நாகலாயிருக்கிற சொத்துகளை உடையவர்கள் ஆஜராய பெறறுக்கொள்ள வேண்டியது

என்று இஸ்தியார் பிறப்பித்திருக்கிற விபரங்கண்டிருக்கிறபடி ஒன்று இத்துடன் அனுப்பியிருக்கிறேன் மற்றசாமான்களுக்குப்படி தயாராகிக்கொண்டு வருவதை அப்போதைக்கப்போது உத்தரவுபடிக்கு அனுப்பிக்கொண்டுவருகிறேன். இது விவரம் தெரியலாவதாய் மனுவு செய்துகொண்டேன்.

1866௵ ஜனவரி௴ 3௳

புதுப்பாளையம் தங்கள் விதேயன்

No. 9.

தெனார்க்காடு சுபா ஆக்டிங் மாஜிஸ்திரேட்டாராகிய மெஸ்தர் ஜார்ஜ் ஜான்பரி துரையவர்கள் சமுகத்துக்கு.

விழுப்புரம் தாலூக்கா 2. வது கிளாஸ் சுபார்டிநேட்டு மாஜிஸ்திரேட்டு கந்தி கிருஷ்ணராவு மிகவும் வணக்கமாயெழுதிக்கொண்ட அர்ஜி

யென்ன வென்றால்.

இககூடி மங்கலிலாகா ஒட்டததார் ஸ்டேஷனைச் சேர்ந்த கருவாட்சி கிராமததுககு வடபுறம் சுமார் ஒருமயில் தூரத்தில் கேழ்வரகு மாதுலுககாகக் காவலிருந்த வாதி வெங்கடடராமன் வகைரா.4. பேரை நாளது மாசம். 24உ ராததிரி நாழிகை தெரியாத வேளையில் சுமார். 4. பேர் திருடர்வந்து அடிதது அவர்களிடத்திலிருந்த. ரூ 1. 12 ,, பெறுமான வஸ்திரம் வகைரா சொததுகளைக் கொளளையிட்டுக்கொண்டு போனதாய் மேற்படி ஸ்டேஷன் அதிகாரியின் நாளது மாசம் 26உ யுளள. 50 நம்பர் அறிககை சார்ஜி நாளதுஉ ராததிரி 7. மணிககு தாககலாயிருககிறது சங்கதி சமுகததுககு அறிககையாக மறுவு செயது கொண்டேன்.

தங்கள் விதேயன்.

No. 10.

தென்னார்க்காடு சுபா மாஜிஸ்திரேட்டாராகிய மெஸ்தர். டி

டபிளியு. ரீட்துரையவர்கள் சமுகத்துக்கு.

திருவாதி. உ. வது வகுப்பு சபார்டி னேட்டு

மாஜிஸ்திரேட்டு சாமபமூர்த்தி ஐயர் எழுதிக்கொண்ட அ

ர்ஜி யென்ன வென்றால்

நாளது மாசம் 1 ௳ 101. நம்பரில் பிறந்த தாக்

கீது சேர்ந்து பார்த்துக் கொண்டேன்.

அதில் கண்ட லிங்கா ரெட்டி பாவையத்தி

லிருக்கும் மொய்தீன் பாவா வென்பவனுடைய ஸ்

திதியை விசாரித்ததில் அவனுக்கு இந்த லோகா

வில் நிலைமையான வீடு நிலம் முதலான ஆஸ்திக

ளில்லை யெனவும் வியாபார மூலத்தில் அவனுக்கு

மாதம். 1. க்கு. 15 ரூபாய்க்குக் குறையாமலும். 20 ரூபா

ய்க்கு உயராமலும் லாபம் கிடைத்து வருவதாகவு

ம் தெரியவருகிறதுந்தவிர அதைப்பற்றி விலலே

ஜ் மாஜிஸ்திரேட்டு நாளது தேதியில் எழுதிய ரிபோ

ர்டடி ஞானும் அவசியமாகவே தெரியவருகிறபடியி னாலே சங்கதி சித்தமறியலாவதாய மனுவு செய்துக் கொண்டேன் மேற்படியிலலேக் மாஜிஸ்திரேட்டு ரி போர்டடையும் இந்த அர்ஜியிலடககத் செய்திரு க்கிறேன் மேலும் மேற்படியாறுககு தஞ்சாவூர் ஜி லலா நாகபபடடணம் தாலூககா பூரிததடி கிராம த்தில் வீடு நிலம் முதலான ஆஸ்திகளிருபபதாகவும் தெரியவருகிறது.

1865 வரு
நவமபர்மாசம் 22உ
திருவாதி.

தஙகள் விதேயன்

No. 11.

தெனனூர்ககாடு சுபா டிஸ்திரிக்டு மாஜிஸ் திரேட்டாரகிய மெஸ்தர் சார்லிஸ் டபிளியு ரீட் துரை யவர்கள் சமுகததுககு.

கூடலூர் தாககுடி. உ. வது. கிளாஸ் சபார்டி

கேட்டு மாஜிஸ்திரேட்டு கோவிந்தராயர் எழுதிக்கொண்ட அர்ஜி யென்னவென்றால்.

திகதுபடி மங்களூர் தாலுக்கா திருப்பாப்புலியூர் சர்க்கார் தர்ம சத்திரத்திற்கெதிரில் தென்னமரத்தின் சமீபத்தில் 40 வயதுள்ள கோனாய் ஜாதியொருவன் செத்துக்கிடந்த விஷயத்தைப்பற்றி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்திரேட்டு வகைரா விசாரித்து அனுப்பிய தஸ்தாவேஜுகளான வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு ரிபோர்ட்டு. க. டெபோசிஷன். 41 நம்பர் அறிக்கை. 1. மகஜர். 1. இம்மூன்றும் கூடவும் இத்துடனகத்து சேர்த்திருக்கிறேன்.

அதுகளிலே அந்த கோனாய். உ. தினமாய் வயிற்றுக்கடுப்பு வியாதியினால் உபத்திரவப்பட்டு நாளது 19உ உதயத்திற்கு தெய்வகதியாய் இறந்து போய்விட்டதாயும் பிரேதத்தின் பேரில் அடிதழும்பு முதலான குறிகளில்லையென்றும் தெரியவருகிறது. அவ்விடத்தில் அகப்பட்ட சொத்துகளென்னவென்றால்:

" 4 " பெறுமான வடக்கத்திய பித்தளை செம்பு... க

" " 3 பெறுமான இரும்பு ஓட்டை தட்டு...... க

" " 1 பெறுமான சணற்புரி தாம்புகயறு.... க

இந்தச் சொத்துகளை வாரிசுதாரில்லாததி லே பேவாரிசு தாக்கல் செய்திருக்கிறேன்.

1865 ஹு ஜூன் மாசம் 22உ

முகாம் தடிக்காடு. தங்கள் விதேயன்

No. 12.

ஆற்காடு தென் கண்டம் ஜில்லா கலெக்டர் அவர்களாகிய சீ. டபிளியு ரீட்துரை யவர்கள் சமுகத்துக்கு.

எலவானாசூர் துக்கடி தாசில்தார் அப்பாசாமி முதலியார் எழுதிக்கொண்ட அர்ஜி.

மதராசு பிரசிடெண்சி ரிவின்யூ கமிஷனர் டபிளியு டி ப்லோர் துரையவர்களுக்கு எழுதிக்கொ ண்ட அர்ஜி அடக்கத்து செய்த விபாபா. க. இதுடன்

அனுபவி யிருக்கிறேன். அந்த விபாபாவின் பேரில் *சயனும் தபாலில் அனுபவிக்க உத்தரவாக வேண்டி யிருக்கிறது. இந்த சங்கதி சித்தப்பிரியமானதாய் மனுவு செய்து கொண்டேன்.

1865 ௵ ஜூலை மாசம் 19௳

எலவனாசூர். தங்கள் விதேயன்.

No. 13.

தென்னார்க்காடு ஜில்லா கலெக்டரவர்களாகிய ஸ்ரீ டபிளியூ ரிட்துரையவர்கள் சமுகத்துக்கு.

திண்டிவனம் தாலூக்கா தாசில்தார் தெய்வநாயகநாயகர் 1865 ௵ ஜூலை ௴ 27௳ கசுபாவிலிருந் தெழுதிக்கொண்ட அர்ஜி.

நாளது ௴ 24௳ 11 நெம்பரில் சாதராண உத்திரவுபடிக்கு நஞ்சை மானவாரி நிலத்துக்கும் கருவம்பாக்கம் வகைரா கிராமங்களின் நஞ்சைநிலங்கள் புஞ்சையில் மாத்தின.

* சயன் *Sign*—English term.

விஷயத்திலும் உண்டாயிருக்கிற பரீக்ஷ கமிட்டியகத்தித்து தயார் செய்விக்கலான கணக்கு. / இதிலடக்கமாயடங்கியிருக்கிற சங்கதி மறுவு செய்து கொண்டேன்.

தங்களவிதேயன்.

No. 14.

தென்னார்காடு சுபா மாஜிஸ்திரேட்டாரவர்களாகிய மேல்தர் ஸ்ரீ டபிளியு ரீட்துரை யவர்கள் சமுகத்துக்கு.

கூடலூர் தாலூகா ஆக்டிங் 2. வது கிளாஸ் சபார்டு கேட் மாஜிஸ்திரேட் திருமலாசாரியார் எழுதிக்கொண்ட அர்ஜி யென்ன வென்றால்.

திக்குடி மங்கலூர் தாலூகா புதுப்பாளையத்தில் பிச்சை யெடுத்துக் கொண்டிருந்த கருப்பஞ்செட்டி யென்பவன் கிராணி வியாதியினால் இறந்து போய் விட்டதாய் மேற்படி கிராம வில்லேஜ் மாஜிஸ்திரேட் எழுதிய ரிபோர்ட்டு. / அது விஷயமாக யேற்பட்ட மஹஜர் நாமா. / ஆகத்தா 2. வரும் இதிலடக்கஞ் செய்திருக்கிறேன்.

இதுகளால இறந்த கருப்பதசெபடி 2. 3. வருஷ கால மாய் புதுப்பாளையத்தில் பிச்சை யெடுத்து சீவனம் செய்து வந்தவன் கிராணி வியாதி கண்டு அந்த வியாதியினால் நாளது மீ 23உ ராத்திரி 7 மணிக்கு புதுப்பாளையத்தில் பிரமணாத தெருவிலிருந்து போய் விட்டதாகவும், மேற்படி சவத்தின் பேரில் வித்தியாசமான குறிகள் யாதொன்று மில்லை யென்றும் மேற்படுகிற சங்கதி விசிதமாகும்படி மறுவு பண்ணிக் கொண்டேன்.

1856 ளு.

நவம்பர் மீ 27உ

புதுப்பாளையம் — தங்கள் விதேயன

No. 15.

தென்னாற்காடு அபா கலெக்டராகிய மெஸ்தர் சி. டபிளியு. பிட் துரை யவர்கள் சமுகத்துக்கு

விழுப்புரம் அக்குடி தாசில்தார். ம. குழந்தை வேலுபிள்ளை யெழுதிக் கொண்ட அர்ஜி.

கைவிட்ட நிலங்களுக்கும் மேற்படி தாம் ஏற்பட்ட நிலங்களுக்கும் கணக்கெழுதும்படி சாதாரண 2. நிரலின்படிக்கு மேற்படி வகை கணக்கில் 278. கிராமங்களின் கைவிட்ட நிலங்களுக்கு முன்னாலே கணக்கெழுப்பி யிருக்கிறது. 88. கிராமத்தின் கைவிட்ட நிலங்களின கணக்குகள் எழுதிய 17. நம்பர் முதல் 22 நம்பர் வரைக்கும் புஸ்தகம் 6. மேற்படி தாம் ஏற்பட்டதற்கு தாலூகா மொத்த கிராமங்க ளெழுதிய முதல் நம்பர் முதல் 9. நம்பர் வரைக்கும் புஸ்தகம் 9. ஆக 15 புஸ்தகங்களையும் அலாயிதா லிபாபா செய்து ரவானா செய்திருக்கிறேன்.

1865 ௵.

ஜூலை ௴ 18உ

தஸ்பா. தங்கள் விதேயன்.

No. 16.

தென்னாற்காடு சுபா கலெக்டராகிய ஸ்ரீ. டப

பிளியு ரீட்துரை யவர்கள் சமுகத்துக்கு.

கூடலூர் தாலூகா ஆக்டிங் தாசில்தார் திருமலாசாரியார் எழுதிக்கொண்ட அர்ஜி.

நிலது மாசம் 24ஃ சமுகத்திலிருந்து சாதாரண 375 நம்பர் உத்தரவு பிரகாரம் கூடலூர் கோவிந்தாராஜ பிள்ளையிடத்தில் வசூலான படிப் பணம் அரூ நாலையும் இத்துடன் ஜவான் கோவிந்த நாயக்கன் வசமாய் அனுப்பி யிருக்கிற சங்கதி மனுவு செய்து கொண்டேன்.

1865 வரு

நவம்பர் மீ 25ஃ

புதுப்பாளையம் தங்கள் விதேயன்.

No. 17.

தென்னாற்காடு ஆபா கலெக்டட் அவர்களாகிய சீ டபிளியு ரீட்துரை யவர்கள் சமுகத்துக்கு

விழுப்புரம் தாலூகா தாசில்தார். துழக்

னாத வேலு பிள்ளை எழுதிக் கொண்ட அர்ஜி யென்ன வென்றால்.

நாளது மாசம் 15௳ 10 நம்பர் உத்தரவுபடி விக்கிரவாண்டி அணைக்கட்டு கிராமங்களின் இருக்கு எசு.ம் பசலி. பேர்க் கணக்கு தயார் செய்து இத்துடன் அனுப்பியிருக்கிறேன் இது சங்கதி சித்தத்துக்கு விதிதமாக மனுவு செய்து கொண்டேன்.

1865 ௵
ஜூலை மீ 20௳
விழுப்புரம். தங்கள் விதேயன்.

No. 18.

தென்னார்க்காடு ஜில்லா கலெக்டராகிய ஸி. டபிளியு ரீட்துரை யவர்கள் சமுகத்துக்கு.

திண்டிவனம் தாலூகா ஆக்டிங் தாசில்தார். ஸ்ரீனிவாசய்யங்கார் 1865 ௵ நவம்பர் மீ 18௳ கசுபா விலிருந்தெழுதிக்கொண்ட அர்ஜி.

நாளது மீ 11௳யின் 41 நம்பர் சர்க்கியுலர் உத்தி ரவு சேர்ந்து பார்த்துக் கொண்டேன்.

அதில் கண்ட படி. திரிகினாமெட்ரிக்கல் ச ர்வே* செய்ய வேண்டிய கட்டடங்கள் துக்கடி ம ங்கூர் இலாக்கா எந்த கிராமங்களிலுமில்லை யென்று விசாரித்ததில் தெரிய வருகிற சங்கதி மறுவு செய் து கொண்டேன்.

தங்கள் விதேயன

No. 19.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டர் மெ லதர் ஸீ டபிளியு ரீட்துரை யவர்கள் சமுகத்துக்கு.

கூடலூர் தாலூகா. ஆக்கடிங் தாசில் தார் திருமலாசாரியார் எழுதிக் கொண்ட அர்ஜி,

நாளது மீ முதல் 315 நம்பரில் சமுகத்தில் பிற ந்த உத்தரவின் கடைசி பாகத்தில் ஆக்கியாபித்திருக்கிற

*

பிராகாரம் காயலாவினல் ஆறு மாச காலத்திற்கு ரஜா

பெற்றிருக்கிற துக்கடி மஞ்சகு ரிலாகா கீழ் அருங்கு

ணம் கிராமத்திய மணியம் வைத்திலிங்கா ரெட்டி

க்கு பதிலாக உமேதுவார் திருப்பாப்புலியூர் ராமசி

ப்பய்யன் என்பவனை நாலது மாசம் 10௨ முதல் சர்கு

கார் தாயில் மணியம் தும்லதாவாக ஏற்படுத்தி வேலை

வாங்கி வருகிறேன் இதுசங்கதி விசிதமாக மனுவு

செய்து கொண்டேன்.

தங்கள் விதேயன்.

No. 20.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டராகிய

மெஸ்தர் ஜீ. டபிளியு ரீட்துரை யவர்கள் சமு

கத்துக்கு.

கூடலூர் துக்கடி ஆக்டிங் தாசி

ல்தார் திருமலாசாரியார் எழுதிக் கொண்ட அர்ஜி.

நாலது மீ 17௨ 363 நம்பர் அஜூருத்திர

வுடன் வந்த. 9. நம்பர் ஸைபட்டியில் 22. நம்பர் கலிவீரா யபிள்ளையினுடைய பேர்வழி நிலத்தை ஸமெத்தவன் பெரும் ஸலம் போட்டுக்கேட்டும் தாக்கல் செய்து அந்த பட்டியை யிடத்துடன் அநுபவி யிருக்கிறேன். இது சங்கதி விசித்திரமாக மனுவு செய்து கொண்டேன்

1865௵. நவம்பர் மீ 24உ

புதுப்பாளையம் தங்கள் விதேயன்.

No. 21.

தென்னார்க்காடு அபா கலெக்டரவர்களாகிய. சீ. டப்ளியு ரீட்டுரா யவர்கள் சமுகத்துக்கு

திண்டிவனம் தாலூகா தாசில்தார் தேவனாயக நாயக்கர் 1865௵ ஆகஸ்டு மீ 6உ கசுபாவி லிருந்து எழுதிக் கொண்ட அர்ஜி.

ஸ்ரோத்திரியம் உலகளர் கனகது வெங்கிடாசல பிள்ளைக்கு உத்தம முதலி வகையரா. 7.

போ. 74ம் பசலிக்குக் கொடுக்கவேண்டிய மே
ரை காரியங்களை அவரிடத்தில் வசூல் செய்து
கொடுப்பிக்க வேண்டிய விஷயமாய் ஜூலை மீ
4உ முதல் நம்பரில் சாதாரண உத்தரவைப்பார்த்து
க் கொண்டேன்.

மேற்படி வாதி தனக்கு 73.ம் பசலியி
ன் மேரை கொடுக்கவில்லை யென்று பிராதா
ய் அந்த பசலி மேரையைப்பற்றி விசாரித்
து சென்ற பிப்ரவரி மீ 24உ 59 நம்பரில் அர்ஜி
செய்து கொண்டிருக்கிறேன்.

சிறுகத்திலிருந்து சாதாரண உத்தி
ரவில். 74ம் பசலிக்கு என்று கண்டிருக்கிறது. 73.ம்
பசலி மேரையைப்பற்றி வாதி பிராது செய்தி
ருக்கிறபடியினாலே இதுவரையில் எந்தபசலி
க்கு அமுல் நடத்த வேண்டியதோ அத
ற்கு உத்தரவாக வேண்டிய சங்கதி முதலிய செ
ய்து கொண்டேன்.

தங்கள் விதேயன்

No. 22.

கௌனர்க்கார அபா கலெக்டராகிய மெ
லைதர் டீ டபிலியு ரீட்டுணா யவர்கள் சமூகத்துக்கு
கூடலூர்த்தாலூகா ஆக்டிங் தாசீ
ல்தார் திருமலாசாரியார் எழுதிக் கொண்ட அர்சி
இக்கூடு மாகாண் முதலாவது கிளாஸ்
ரிவினியூ இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி முதலி
யாரை நவம்பர் மீ 10௳ 344 நம்பர் அர்ஜி உத்தி
ரவுப்படிக்கு இந்தவிடம் சமூகத்துக்கு அனுப்பி
யிருக்கிற சங்கதி விதிதமாக மனுவு செய்து
கொண்டேன்.

1865௵

நவம்பர்மீ 14௳

புதுப்பாளையம். தங்கள் விதேயன்.

No. 23.

தென்னார்க்காடு சப்பா மாஜிஸ்திரேட்டாரா
கிய ஸ்ரீ டபிளியு ரீட்ஸனா யவர்கள் சமுக
த்துக்கு.

திருவாதி. 2. வது கோனால் சபார்டி
னேட்டு மாஜிஸ்திரேட்டு சாமய்யாக்கி அ
ய்யர் எழுதிக்கொண்ட அர்ஜி யென்னவென்றால்

பிறகாமல் கூடாச் சேர்க்க தூக்கா
ர் வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு அய்யாவு படையா
ச்சி என்பவன் சென்ற ஜனவரி மீ 27ᵘ யில் இற
ந்து போனதாக மேற்படி யூர் மணியம் சிதம
பலப் படையாச்சி மேற்படி மீ 31ᵘ எழுதிய
ரிப்போர்ட்டினாலே தெரியவருகிறது. மேற்படி
வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு வேலைக்கு அக்கி
ராமத்திலிருக்கிற குடிகளில் லாயக்கானவும் யோ
க்கியனும் எழுதப்படிக்கத் தெரிந்தவனும்
இருக்கிற ஒருவனை நியமனஞ் செய்து கொண்டு

யினாலே சமுகத்துக்கு அறிக்கை செய்து கொ
ளுகிறேன் அது வரையில் மேற்படி வேலை
யைப்பார்த்து வருமபடி அந்த சமீப தா
லுகாயிருக்கிற வலலம் பட்டாமணியம் பொன
ணம்பலம பண்டாரத்துக்கு உத்தரவு கொடுத்
திருக்கிறேன். சங்கதி சித்தமறியலாவதா
ய மனுவு செய்து கொண்டேன்.

1865ளு பிப்ரவரிமீ 10உ

திருவாதி. தங்கள் விதேயன்

No. 24.

தென்னாற்காடு ஜில்லா கலெக்ட்டரவர்
களாகிய வெல்ஸ் சீ. டல்ரிம்பிள் துரைய
வர்கள் சமுகத்துக்கு.

திருவண்ணாமலை தாலூக்கா சிரஸ்தே
தார் திருமலராவு மிகவும் வணக்கமாய் சலா
ம் செய்து 1865ளு நவம்பர்மீ 18உ கல்பாவிரு

ந்தெழுதிக் கொண்ட சாமி.

ரோதை மீ 11உ 40 நம்பரில் பிறந்த சமுகத்து உத்தரவு சேர்ந்தது வாசித்தேன்.

உத்தரவு படிக்கு துரைகள் கடாக்ஷித்துச் செய்த எனக்கு வருகிற படிசம்பளமில் ரூ-(௰கல் பென்ஷன் செயவித்துக் கொடுக்க வேண்டுமென்றும் நான் பாரி குடும்பியாயும் ஏழையாயும் துரைகள் ஆதரவு தவிர வேறே ஆதரவில்லாமலிருக்கிற படியால் இந்த துரைகள் ஆலோசனையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் மிகவும் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் விதேயன்

No. 25.

ஆற்காடு சுபா தென்பிரிவு சீர்மையின் மாஜிஸ்திரேட்டாராகிய. ஜார்ஜ் பா

ன்பரிந்தானா யவர்கள் அழுக்கத்தக்கது.

திருவதி த்தத்துபடி. உ. வது கிராம சப்மாஜிஸ்டிரேட்டு சாமயூரக்கி ஐயா வரு கிக் கொண்ட அர்ஜி யென்னவென்றால்

பிற்கா மக்களைச் சேர்ந்த பறையு ரெட்டியிலிருக்கும் அங்கமுத்து கவுண்டன் கொடுக்க பிட்டிஷன் பேரில் அருக்கமாய்நி போர்ட்டு செய்யும்படி நாளது மீ 16உயில் 146 நம்பரில் பிறந்த இன்டார்ஷ உத்திரவு வந்து சேர்ந்தது.

பிட்டிஷனில் சொல்லியபடி கேஸை விசாரணை செய்து. 15 நாள்வரையில் யாதொரு முடிவுஞ் செய்யாமலிருக்கவில்லை. அப்படி சொல்லுவது சுத்த பொய்.

மேற்படி கிராமத்தில் வக்கா யத்து ஜாரியாயிருக்கிற மானிய நிலங்களில் சில நிலத்தை மேற்படி கிராமத்திலிருக்கும்

துடைய கவுண்ட னென்பவன் கவுல் பெற்று அநுபவித்து வந்திருக்க, இந்த நிலத்தை பிட்டெவுன்தார் வகைரா சில பேர் தாவாக்கிறதெனாய சாருபடி செய்ததாக என்னிடத்தில் பிராது வந்தது. அந்தக் கேசு விசாரணையாய் நாளது மீ 14உ யுடன் முடிவாகி தீர்வாளிகள் பேரில் குற்றம் ஸ்தாபிதமாச்சுது. என் அபிபிராயப்படி அந்த கேசை மேல் கோர்ட்டுக்கு ரிபர் செய்யவதற்கு, சில அவசியமான தகரார்களை விசாரணை செய்யும்படியாய் கசுபாவுக்கு. 10. மயில் தூரத்திலுள்ள எய்ட்டோர் கிராமத்துக்குப் போயிருந்து நேற்றையதினந்தான் திரும்பி வந்தபடியினாலே, தடங்கலாச்சுது இப்போது சீக்கிரத்தில் ரெக்கார்டுகளைச் சீர்ப்படுத்தி மேல் கோர்ட்டுக்கு ரிபர் செய்யப் போகிறேன். இந்தச் சங்கதி தங்கள் சித்தம றிய லாவதா யெழுதிக் கொண்டேன். அசல்

பிட்டிஷனை யிதிலடக்கஞ் செய்திருக்கிறேன்

1865 ௵

ஆகஸ்டு ௴ 19௳ தங்கள் விதேயன்.

No. 26.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டரவர்களாகிய சீ. டபிளியு ரீட் துரையவர்கள் சமுகத்துக்கு

திருவண்ணாமலை தக்குடி தாசில்தார் வெங்கிடரமணய்யர் 1866 ௵ ஜனவரி ௴ 3௳ கசுபாவிலிருந்தெழுதிக்கொண்ட அர்ஜி.

டிசம்பர் ௴ 11௳ 52. நம்பரில் கிடைத்திருக்க உத்திரவுபடி கைவிட்ட நிலங்களுக்கு தரவாரி கோஷ்வாரு போடுவித்து அதையும் மறைக்கணக்கு புஸ்தகங்களையும் சமுகத்துக்கு அனுப்பியிருக்கிறேன்

சமுகத்தில் பார்வையிட்டு சயன்

சாபா செய்து ஆனதின்மேல் நாளது பசலி அடங்கல் கணக்கில்தானே தீர்வை நிகுதபாடு ஆகும் பொருட்டு அந்தப் புஞ்சைகங்களில் சேதுவாரி புஞ்சைகங்களை தரிசமாய் தாலூகாவுக்கு அறுப்பு உத்திரவாக வேண்டிய மனுவை செய்து கொண்டேன்.

- தங்கள் விதேயன்

No. 27.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டர் மெஸ்தர் சி டபிளியு ரிட்துணையவர்கள் சமூகத்துக்கு.

கூடலூர் தாலூகா ஆக்டிங் தாசில்தார் திருமலாசாரியார் எழுதிக் கொண்ட அர்ஜி.

அகத்து மங்கள் இலாக்கா முதலப்பட்டு கிராமத்திய பட்டாமணியகாரர்களு

த்து பதிலாக ஒருமணிதனை காபு வேலைக்கு கேட்கதுசெய்யது போர் கண்டு ரிபோர்ட்டு செய்யும்படி நானது முதல் 315 நம்பரில் உத்திரவு கிடைத்திருக்கிறது

மேற்படி மதலபபட்டு கிராமம் விலக்கிது துடிகள் அடர்ந்தும் சலியபபட்டதுமானதையால் அந்த கெட்டிக்காரனாய் ஒருவனிருக்க வேண்டிய அவசியமாயிருக்கிறது.

அதைக்குறித்து விசாரணை செய்ததில் 319 நம்பர் உத்திரவுபடிக்கு தீர்த்த நகரி கிராமத்துக்கு ஆக்டிங் தப்தால்று யேற்பட்டிருக்கிற மங்களகிரி கிருஷ்ணுனாவு னாயகன் யிருக்கிறான். தற்காலம் அவனை தக்கவாள் வேறே அகப்படயில்லை. மணியக்காரரிலலாத காரணத்தால் அந்த கிராமத்தில் புது முதல் அக்டோபர்மீ

த்திய விஷயத்தை சுருக்கமாய் வரிப்பணம் வசூ
லாகவில்லை. என்னுது பாக்கியும் விஸ்தரித்தி
ருக்கிறது. கோட்டைக்காரனும் நாளது மீட்டில்
தான் ஏற்பட்டிருக்கிறேன். இதுகளினாலே சுக்
கியமாய் மேற்படி மங்களகிரி கிருஷ்ணாவை
மகல்ப்பட்டு கிராமத்துக்குப் போய் பணம் வ
சூல் வகைரா வேலைகளை பார்த்து வரும்படி
நாளது மீ கஉ யில் தாக்கீது கொடுத்தனுப்
பியிருக்கிறேன். ஆகையால் நான் தாற
பரியப்படுத்தும்படி அவனை மகல்பட்டுத்
தாபு வேலையில் வர்த்திப்பிக்கி அவனுக்குப்
பதிலாக தீர்க்கநகரி தாபு ஆசாமிக்குவே
றே தத்தக ஒருவனை யேற்படுத்த வேணு
மென்று மனுவு செய்து கொண்டேன்.

1866௵ நவம்பர்௴ 11௳

கெபாபுத்துப்பாளையம் தங்கள் விதேயன்

தெபிட்டி
சுப்பராவ்

No. 28.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டட
வர்களாகிய மெஸ்தர் ஜீ. டபிளியூ ரீட் துரை
யவர்கள் சமுகத்துக்கு.

திருவண்ணாமலை தாக்குடி சிரஸ்தே
தார் திருமலைராவு மிகவும் வணக்கமாய. 1865
௵ டிசம்பர் ௴ 19௳ கசுபாவிலிருந் தெழுதிக் கொ
ண்ட அர்ஜி.

வருகிற ஜனவரி ௴ முதல் தேதியி
ல் காலூர்க்கு நாசில்தாரிடத்தில் உத்திரவு பெற்று
க் கொண்டு பிரெஞ்சு அப்ளிகேஷன் வகையரா
தயார் செய்கிறதற்காக என்னை அநுக்குவங்
காஜராகும்படி ரூ. ௴ சுமா 50 நெம்பரில் சமுகத்
து உத்திரவு சாதரா யிருக்கிறபடி நடக்க சித்த
மாயிருக்கிறேன்.

கார்த்திகை தீப உச்சவ காலத்தில் இவ்விடம் விஜயஞ் செய்திருந்த எட் அசிஸ்டாண்டு கலெக்டர் துரையவர்கள் மறு உத்தரவு வரையிலாவது அல்லது சால்தேதார் வேலைக்கு வேறொருவர் ஏற்பட்டு வருகிற வரையிலாவது என்னை யிவிடத்தி லிருந்து சால்தேதார் வேலையை சாக்கிறதையாய் பார்த்து வரும்படி தேபு ரூபில் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

ஆகையால் சமுகத்து ஷை உத்தரவுபடிக்கு நான் வருகிற சனவரி மீ முதல் தேதியில் தாசில்தாரிடத்தில் உத்தரவு பெறுகைக் கொண்டு சனிதானத்துக்கு வரவேண்டிய விஷயத்தைக் குறித்து என்ன உத்தரவு செய்கிறீர்களோ அந்தப்படி நடந்து கொள்ளுகிறேன்.

தங்கள் விதேயன்

No. 29.

தென் ஆர்க்காடு சுபா கலெக்டரா
வர்களாகிய ஜி. டபிள்யூ பீட்டரா யவர்கள் சமு
கத்துக்கு

கூடலூர்தக்குடி ஆக்டிங் தா
சில்தார் ஸ்ரீமேலாச்சாரியார் எழுதிக் கொண்ட
அர்ஜி.

நூ மீ ௳ 337 நெ. ல் சுழுக்கில்
பிறக்க உத்திரவுப் படிக்கு அக்குடி மங்கா
இலாகா வேப்பூர் பாளையம் கிராமத்திலிருக்கும் கபி
லாயக்கன் என்பவனை வரவழைத்து இந்த அ
ந்தி ஏகாந்தமாய் ஐயான் நாராயணசாமி நாயக்கன்
வசமாக ஏழுத்துக் கூப்பி யிருக்கிற சங்கதி
விசிதமாக முறைவு செய்து கொண்டேன்.

க அசாரு ஷை
நவம்பர் மீ கஉ ௳.

புதுப்பாளையம். தங்களவிதேயன்

No. 30.

தென்னாற்காடு அபா கலெக்டரவர்களாகிய ஸ்ரீ டபிளியு ரீட்துரையவர்கள் சமுகத்துக்கு.

எலவானாசூர் ஜகத்தடி காவல்கார அய்யாசாமி முதலியார் எழுதிக்கொண்ட அர்ஜி யென்னவென்றால்.

சென்ற டிசம்பர் மீ 11௳ சாதாரண. 62 நம்பர் டெட்டுக் காவின்படிக்கு கைவிட்ட நிலங்களுக்கும் புறம்போக்கு நிலங்களுக்கும் தீர்வை போட்டு வழக்கின்படிக்கு கணக்கும் தயார் செய்வித்து நாளது மீ 1௳ அனுப்பி யிருக்கிறேன்.

1866 ௵

ஜனவரி மீ 3௳

எலவானாசூர். தங்கள் விதேயன்.

No. 31.

தென்னாற்காடு ஜில்லா கலெக்டராகிய. ஜி. டபிளியூ ரீட்துரை யவர்கள் சமுகத்துக்கு.

விழுப்புரம் தாலூக்கா தாசில்தார். ம. திருநகை வேலுப்பிள்ளை எழுதிக்கொண்ட அர்ஜி யென்னவென்றால்.

பேபர் காண்சி நோட்டுகள் விற்பனைக்காக தேவையானதற்கு பட்டியுடனே நாளது மீ 18௨ 11 நம்பரில் சமுகத்துக்கு மனுவு செய்து கொண்டிருக்கிறேன்.

அந்த பட்டியில் கண்டிருக்கிற படிக்கு நோட்டுகளை இந்த அர்ஜியுடன் வருகிற ஜவான் மைசயது உசேன் வசமாய் அனுப்ப உத்தரவாக வேண்டியது சீக்கிர மனுவு செய்து கொண்டேன்.

1865 ௵ ஜூலை மீ 18௨

தஅபா . . . . தங்கள் விதேயன்

No. 32.

தென்னாற்காடு அபா கலெக்டரா
கிய மெஸ்தர் சீ. டபிளியு ரீட்துரை யவர்
கள் சமுகத்துக்கு.

விழுப்புரம் தகுடி தாசில்தார்
துபுங்கை வேலுப்பிள்ளை யெழுதிக்கொண்ட அர்ஜி.

சென்றமீ 30உ 485 நம்பரில் சாதரான
தாக்கீதுடன் வந்த ஜாமீன்களில் ஸ்டாம்பு
வெண்டர் ஜெகனாதமுதலியாருடையவும் அ
வருக்கு ஜாமீன் கொடுக்க பாக்கியப்பட்ட பாக்
கம் . கண்ணு கிருஷ்ணபிள்ளை யுடையவும் சா
ட்சிகளுடையவும் கையெழுத்து வாங்கி என்
கையெழுத்தும் போட்டு மேற்படி ஜாமீன்கது
ருக்காவை இதிலடக்கஞ்செய்து சமுகத்துக்கு
அனுப்பியிருக்கிறேன். இந்தவிவரம் விதிதமாக
மனுவு செய்து கொண்டிருக்கிறேன்.

1865 வரு ஜூலை மீ 12உ
கஸ்பா விழுப்புரம்.

தங்கள் விதேயன

No. 33.

தென்னாற்காடு சுபா ஆக்டிங் கலெக்டர் அவர்களாகிய மெஸ்தர் ஹாரிஸ் பாண்புரி துரை யவர்கள் சமுகத்துக்கு.

திண்டிவனம் துக்கடி ஆக்டிங் தாசில்தார். ஸ்ரீனிவாசயயங்கார் 1865வரு அக்டோபர் மீ 19உ கல்பாவிலிருந்தெழுதிக் கொண்ட அர்ஜி.

தேவஸ்தானங்களுடைய ரொக்க வரும்படிக்கு பதில் மானியம் விடவேண்டியதற்காக தர்ம கர்த்தாக்களிடத்தில் முதலாவது உத்தரவுபடிக்கு கணக்கு வாங்கி அனுப்பும்படி சென்ற செப்டம்பர் மீ 30உ 37. நம்பரில் சாதராயிருக்க இரண்டாவது உத்தரவு வந்து சேர்ந்து பார்த்துக் கொண்டேன்.

இந்தத்தாலூகாவில் 9 தேவஸ்தான மிருக்கிறது அதில் இரண்டு தேவஸ்தானத்துக்கும் யோமியதார் வகைரா.6. பேர் ரொக்கவரும்படி

க்காரருக்கும் கணக்கு தயாராயிருக்கிறது. மறு 7. தேவஸ்தானத்துக்கு கணக்காகாம லிருக்கிறபடி யினாலே கர்மகர்த்தாக்களை ஆசாரதும்படி கண்டிப்பாய் உத்திரவு அனுப்பி யிருக்கிறேன். சீக்கிரத்தில் கணக்கு முடிவு செய்வித்து அனுப்புகிறேன். இது சங்கதி மனுவு செய்து கொண்டேன்.

தங்கள் விதேயன்.

No. 34.

தென்னாற்காடு அபாகலெக்டரவர்களாகிய மெஸ்ஸர் ஜார்ஜ பான்புரி துரையவர்கள் சமுகத்துக்கு.

திருவண்ணாமலை தத்துப்டி தாசில்தார் ஸ்ரீனிவாசய்யங்கார் 1865 வரு அக்டோபர் மீ 11௳ கசபாவிலிருந்து எழுதிக் கொண்ட அர்ஜி.

நாளது மீ ௲ 47 நம்பர் சாதா

ள உத்தரவுபடிக்கு கவால் சேந்தி ஜோனாதா
ர் கடைக்காரனுடைய பேர் கண்டு அதில்
கொடுக்க காயிதாவில் கண்ட மொத்த இடம்
பேர் இருக்கிற அந்தந்த நம்பர் முசல்லிக்காக்
களின் அடியில் சரியா யெழுதி அவர்களு
டைய கையெழுத்தும் வாங்கி வசென்சுகளை
பட்டுவாடா செய்திருக்கிறேன். இன்னம் பாக்
கி யிருக்கும் இரண்டு முசல்லிக்காக்களிலும் கடை
க்காரர்களிடத்தில் கையெழுத்து வாங்கி அதை
யும் மேற்படி கடைக்காரர்களிடத்தி லிருக்கிற
வசென்சுகளையும் ஒரு ரூபாய் கிரயமுள்ள கா
கிதத்தில் வாங்கின முசல்லிக்காக்களையும் கூடி
ய சீக்கிரத்தில் சமுகத்துக்கு ரவாறு செய்கிறே
ன் இது சங்கதி சித்தமியலாவதாய மனுவு
செய்து கொண்டேன். முன்கிடைக்க வசெ
ன்சுகள் பட்டுவாடாவாய் விட்டது. அசல் உ
டன்படிக்கைகளையும் பின்னால் அனுப்புகிறேன்

—தங்கள் விதேயன்.

No. 35.

தென்னாற்காடு அபா ஆக்டிங் மாஜிஸ்திரேட்டாகிய மெல்லர் ஹாரிஜ பான்புரூ துரையவர்கள் சமுகத்துக்கு.

விழுப்புரம் தகுதி இன்சார்ஜ் உ. வது கிளாஸ் சபார்டிநேட்டு மாஜிஸ்திரேட்டு கந்தி கிருஷ்ணராவு எழுதிக் கொண்ட அர்ஜி.

நிரைதா மீ 18உ ராத்திரி சுமார். 12.

மணிக்கு முகையூர் ஸ்டேஷனைச் சேர்ந்த வடகரை தாயனூர் கழனிவெளியில் கொட்டகையண்டையிலிருக்க வடி(இடைய வெங்கடாசலபிள்ளை மகன்) முத்துசாமி வகைறாக்களை சுமார். 6 பேர் திருடர் வந்து அடித்து அவர்களிடத்திலிருக்க ரூ. 6. 4. 4. பெறுமான வஸ்திர வகைறா சொத்துக்களைக் கொள்ளை.

யடித்துக் கொண்டு போனார்களென்றும், அதே காலத்தில் திருமலப்பட்டி கிராமத்தில் ஆட்டுக் கிடையில் படுத்திருந்த முத்தியாலுகான் வகை ராககளை சுமார். 4. 5. பேர் திருடர்கள் வந்து தடியினால் அடித்து காயப்படுத்தினார்களென்றும் மேற்படி இரண்டு கிராமங்களின் விலலே ஜு. மாஜிஸ்திரேட்டுகளின் ரிபோர்ட்டுகளின் பேரில் வ்பேடைன் அதிகாரி இன்றைய தினம் தயார் செய்து அனுப்பிய 19 யுள்ள 26 நம்பர் அறிக்கை சாரம்சத்தினால் தெரியவருகிற சங்கதி சமுகத்துக்கு அறிக்கையாக மனுவு செய்து கொண்டேன்.

1865 வரு செப்டம்பர் மீ 20

கல்பா விருப்புறம் . . . . தங்கள் விதேயன்.

No. 86.

திருச்சிராப்பள்ளி ஜில்லா ஜட்ஜ் அபிஸ்

டாண்டு மாஜிஸ்திரேட்டு வால்டர் ஜில்லெட் துரையவர்கள் சமூகத்துக்கு.

டவுன் சப் மாஜிஸ்திரேட்டு சேதுராவு மிகவும் வணக்கமாய் சலாம் செய்து எழுதிக்கொண்ட அர்ஜி யென்னவென்றால்.

நாளது மீ௨௨ ராத்திரி கம்பாசன் பேட்டையி லிருக்கும் அய்யாவய்யன் வீட்டில் திருடன் கன்னம் வைத்து பாத்திரங்களை யெடுத்து விட்டதாக மேற்படி கிராம முன்சீப் ரிபோர்ட்டு செய்ததனால் என்னதாக்கீதின் பேரில் என்கச்சேரியில் வந்து ஆசாமி மேற்படி அய்யாவய்யனை விசாரணை செய்ததில் நாளது மீ௨௨ ராத்திரி தான் கீழ்புறம் கொட்டடியிலும் தன் மகன் மேற்புறம் கொட்டடியிலும் படுத்திருந்ததாகவும் ராத்திரி சுமார். ௧. மணிக்கு தன் வீட்டுக்கு மேலண்டை சந்தடியாயிருந்ததினாலே தன் மகனை கூப்பிட்டுக் கொண்டு தாழ்ப்பாளை

ளியில் ஓடிவந்து பார்த்ததாகவும் திருடன் ஓடிப்போ
ய்விட்டதாகவும் கன்னம் வைத்தவிடத்தில் துவாரமாக
வில்லையென்றும் தன்வீட்டில் ஒன்றும் களவுபோ
கவில்லையென்றும் அப்படி கன்னமிட்டவன் பலான
வனென்று தனக்குத் தெரியாதென்றும் வாக்குமூலங்
கொடுத்தான். அன்றுராத்திரி முன்சீபும் தலையாரியு
ம் சேர்ந்து வந்தார்களாம்.

திருடனைக்கண்டு பிடிக்கும்படி கிரா
ம முன்சீபு தலையாரி முதலானவர்களுக்குக் கண்டி
ப்பான தாக்கீது கொடுத்திருக்கிற சங்கதியும் இ
ந்த விசாரணையிலேற்பட்ட வாக்குமூலம் ௧. முன்சீ
பு ரிபோர்ட்டு ௧. ஆக இரண்டையும் சமுகத்துக்க
னுப்பியிருக்கிற சங்கதியும் சித்தத்துக்குத் தெரி
யலாவதாய் மனுவுசெய்து கொண்டேன்.

1861 ௵.

ஜனவரி ௴ 26௳ தங்கள் விதேயன்.

No. 37.

தென்னாற்காடு சப் மாஜிஸ்திரேட்டாரா
கிய சி. டபிளியு ரிட்டுமை யவர்கள் சமுகத்து
கூடலூர் ௧௮௬௩ ஆகஸ்டு மீ. ௨ வ
து கொராஜ் சபார்டினேட்டு மாஜிஸ்திரேட்டு தீரு
மலாசாரியா ரெஜூக்கொண்ட அர்ஜி.

௧௮௬௩ மஜ்கூர் தாலுகா இரண்டாயிர
வளாகம் மணியம் துமல்கா வரதாரெட்டி யென்ப
வன் இந்தமாசத்து கீல்துத்து மேற்படி கிராமத்
தில் நான்வதூல் செய்த ரூபாய் 8/--- வெள்ளை
த்துணியில் முடிந்து தோளில் போட்டுக்கொண்
டு சாயங்திரம் -ரு. மணிக்கு பிராஞ்சு எல்லையில்
சேர்ந்த துருவிணைக்கம் கிராமத்தண்டை வரும்பேது
அந்தவூர் அழகப்ப கவுண்டன் என்பவன் முடி
ச்சுடன் பணத்தையும் செகப்பு துட்டையையும் பி
டுங்கிக்கொண்டு போனதாயும் அந்தத்துறைவாளி
யைக்கட்டயத்துடன் பிடித்து அந்த இலாகா

சவுக்கார் தலையாரி இவர்கள்வசம் செய்திருக்கிற
தாயும் நாளது மீ 27உ யாகிய தேதை சாயங்கிரம்
6 மணிக்கு கசுபாவில் எனனிடத்தில் ஆஜராய்ச்சொ
லலிக் கொண்டான்.

அந்த விஷயத்தைப்பற்றி அவனிட
த்தில் வாங்கின வாக்குமூலத்துக்கு நகலொன்றை
இத்தில் அடக்கஞ்செய்து தங்கள் பார்வைக்கு அ
னுப்பி யிருக்கிறேன்.

மணியம் துமல்கா சொல்வது வால்
தவமாயிருக்கும் பட்சத்தில் தயத்துடன் தூற
றவாளியை தக்க பந்தோபஸ்தாய் வைக்கும்
படி பாகூர் தாசில்தார் வகைறாக்களுக்கு யா
தாஸ்து அனுப்பி செவின்யூ இன்ஸ்பெக்டர்
அணைஜிராவையும் உடனே யனுப்பியிருக்
கேன்.

மேற்படி செவின்யூ இன்ஸ்பெக்ட
ர் வகைராக்கள் விசாரிக்கதில் பிராந்சு இலாகா

கிராமங்களில் சூறைவாளி யகப்படவில்லையென்
றும் இங்கிலீஷ் திலாகாவிலிருக்கிற மேற்படி
இரண்டாயிர வளாகம் என்கிற கிராமத்தில் நே
ற்று ராத்திரி. 7. மணிக்கு மேற்படி சூறைவா
ளி கடயத்துடன் அகப்பட்டு அந்த வில்
லேஜ் மாஜிஸ்திரேட்டு அவ்விடத்தில் அவனை
பந்தோபஸ்து செய்திருக்கிறானென்றும் அவர்களு
க்குத் தெரியவந்ததாக எனக்கு அறிக்கை செய்து
இன்றையதினம் என் முன்பாக காலமே. 11. மணி
க்கு மேற்படி நபரை ஆஜர்படுத்தி யிருக்கிறார்
கள் அந்த சங்கதியை கருதிக்கு விசாரித்துக்
கொண்டிருக்கிறேன்.

1865 ௵ நவம்பர் மீ 28உ

புதுப்பாளையம். தங்கள் விதேயன்

No. 38.

ஆற்காடு சப. தென்பிரிவு சீமையின்

மாஜிஸ்திரேட்டாராகிய. சீ. டபிளியூ ரீட்துரையவர்கள் சமுகத்துக்கு.

திருவாசி. உ-ஷ வருஷம் சப்ஆர்டனேட் மாஜிஸ்திரேட்டு சாமபமூர்த்தி அய்யர் எழுதிக்கொண்ட அர்ஜி யெனவெனறால்.

பணையூர்பட்டி கிராமத்திலிருக்கும் தினைக்கமபிராவுத்தன் என்பவன் காக்காயவலிப்பு வியாதியினாலே மேற்படியூர் குசவன் குட்டையில் விழுந்திறந்து போனதாக மேற்படியூர் வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு ஜனவரி மீ 11௳ எழுதிய ரிபோர்ட்டு. க. மேற்படி வில்லேஜ் மாஜிஸ்திரேட்டு பிரேதமிருக்க வ்திதியைய பயமில் கிராமத்தாரிடத்தில் வாங்கியுறைபினா மகஜர். க. பணையூர்பட்டி ல்டேஷன் ஹெட் கான்ஸ்டேபில் அனுப்பிய முதல் நமபர் ரிபோர்ட்டு. க. இறந்தவன்தாயார் பாளிபியமமை வாக்குமூலம். க. அவன் அண்ணன் மொகிதின்சா வாக்குமூலம். க. ஆக

தோ. ரு. ம். இதிலடக்கது செய்திருக்கிறேன்.

ஆமார். ௩௦. வயதுள்ள இறந்துபோன சின்னதம்பிராவுத்தன் பிறந்தநாள்முதல் காக்கா வலியென்கிற வியாதியினால் வருத்தப்பட்டுக் கொண்டிருந்து, சென்ற ஜனவரி மீ௳ எ பகல் துலக்கத்துக்குப் போய் வருகைக்காக்கஞ்சொ லலிப் போட்டுப் போனதாயும், வெகுநேரம் வராமலிருந்ததில் சந்தேகப்பட்டுத் தேடிக் கொண்டிருந்ததில், ஜனவரி மீ 11௳ காலமே அவன் வீட்டுக்குச் சமீபத்திலிருக்கிற துசவன் குட்டையில் ஒரு ஆள் புருஷ தண்ணீரில் பிரேதமாய் மிதந்து அகப்பட்டதாய்த் தெரிய வருகிறது.

அந்த பிரேதத்தின் பேரில் அடிக் குமபு முதலான பொலல்லாங்கான குறிகள் ஒன்றுமில்லை யென்றும் மேற்படியானுக்கு உண்டாயிருக்கக் காக்காவலியினாலே ஜலபானஞ்

க்குப் போய் தண்ணியில் இறங்கின பேரது தெய்வகதியாய் இறந்து போனதென்றும் ருசுவானபடியினால் பிரேதங்களை யடக்கஞ்செய்ய விலக்குமென மாஜிஸ்திரேட் உத்திரவு கொடுத்து நியமமாயிருக்கிற சங்கதி மனுவு செய்து கொண்டேன்.

1865 ளு

பெப்ருவரிமீ 17உ

திருவாதி. தங்கள் விதேயன்.

No. 39.

தென்னாற்காடு ஜில்லா மாஜிஸ்திரேட்டாராகிய. சி. டபிளியு ரிட்டுமை யவர்கள் சமுகத்துக்கு.

திருவாதி. 2. வது வகுப்பு சபார்டினேட் மாஜிஸ்திரேட் சாமப்பூர்த்தி அய்யர் எழுதிக் கொண்ட அர்ஜி.

பிரகா. மங்களாச சேர்ந்த நாயப்பாடி யில
லேஜ மாஜிஸ்திரேட்டு நாளது மீ நூ. அ
ஜயபிய ரிபோர்ட்டு. க. பண்ருட்டி ல்
டேஷன், ஏட்கான்ஸ்டேபில் அஜயபிய
சார்ஜ பத்திரிகை. க. அணூஜி செய்டவ
கோர தடிகள் கொடுக்கமாஜர். க.. கட்
டய்யன் வாக்கு மூலம். க. கருக்கு படையாச
சி வாக்கு மூலம். க. ஆக்கா. ரு. ம் இல
டக்கமாய் பார்வைக்கனுப்பி யிருக்கிறேன்

சென்னப்ப நாயக்கன் பாளையம் ம
ஜரவாண்டராசங் தப்பக்கிலிருக்கும் கட்டய
யன். க. மேற்படியான் கப்பன் சின்னது
படையாச்சி. க. சில ஜனங்களோடு கூடு
வண்ணுமலையிலிருந்து நாளது. மே 3 ராத்திரி
எ. மணிக்கு புதுப்பேட்டை கிராமத்தில்க
டைக்கெருவில் வந்துக்கொண்டிருக்கும்
போது கிழக்கே யிருந்து ஓடிவந்த ஒரு

எருதுமாடு அங்கே போய்க்கொண்டிருந்த கோவிந்தனை இடுப்பில் இடதுபுறத்தில் முட்டி சுமார். ௩. அங்குல ஆழம் காயப்படுத்தினதாகவும். உடனே மேற்படி சின்னது படையாச்சியை வலது பக்கம் விலாவில் பாய்ந்து நாலு அங்குல ஆழம் மூன்று அங்குல நீட்டத்து காயப்படுத்திக் கொன்று விட்டதாகவும் தெரியவருகிறது.

மேற்படி பிரேதத்தை நான் பார்வையிட்டதில் மேற்கண்டபடி விசேஷ காயம் சம்பவித்ததினால் இறந்து போனதாகக் காணப்பட்டபடியால் உடனே அடக்கஞ் செய்ய உத்தரவு கொடுத்துவிட்டு காயப்பட்ட கோவிந்தனை மருத்துவம் ஆசுபத்திரிக்கு யாதாஸ்துடன் அனுப்பியிருக்கிறேன்.

மேற்கண்டபடி காயப்பட்டு

ய எருதுமாடு சுமார். 25. ரூபாய் பெறுமான
தாயிருக்கிறது அந்தமாட்டுக்கு யார்சுதா
ரர் இன்னாரென்று தெரியவில்லை அதைத்து
னையபாடி வில்லேஜு மாஜிஸ்திரேட்டு வசு
த்தில் ஒப்பித்து அதற்கு சொந்தக்கார
யாரானாலுமிருந்தால் ஆஜராகும்படி இவ்வி
ஷயம் பிரசித்தஞ் செய்திருக்கிற சங்கதி
த்தை மறியவாடகாய மறுவு செய்து கொ
ண்டேன்.

1865 ௵

டிசம்பர் ௴ 5௳ — தங்கள்விதேயன்.

No. 40.

தென்னாற்காடு சபா|டிஸ்திரிக்டு
மாஜிஸ்திரேட்டாகிய மெய்சர் ஜீ டபிளியு
ரிட்டுனா யவர்கள் சமுகத்துக்கு.

கூடலூர் தாலூகா .2. வது ஜொனவ

சபாபதி செட்டி மாசிலாமணிசெட்டி கோவிந்தரா
யர் எழுதிக் கொண்ட அர்ஜி யென்னவெ
ன்றால்

மலைப்பெருமாள் அகரத்தில் ஊருக்
கு வடபுறத்திலிருக்கிற ராமசெட்டி என்பவ
னுடைய தென்னங் கொல்லையில கட்டிக்கொ
ண்டிருந்த பள்ளிஜாதி 11 வயதுள்ள வெள்ளைய
னென்பவன் அந்த கொல்லைக்கு அருகா
ப போயிருக்கிற துரவில், நாளது ஜூலைமீ
26உ பகல் 3 மணிக்கு தவறிவிழுந்து ஜலத்தில்
மூழ்கி மிதந்து போனதாயும், அந்தச்சங்கதி
அந்த வழியாய் மாடுகளை ஓட்டிப்போ
ன முத்தன வகையரா பசங்களினால் தெரியவ
ந்ததாயும், பிரேதத்தை வெளியிலெடுக்
கு இறந்துபோனவன் தகப்பன் வகையரா
க்களை வைத்துக் கொண்டு பார்வையிட
தில் அடிகுழம்பு முதலான குறிகள் ஒன்

துமில்லாமல், தெய்வசகாயம் இறந்துபோ
னதாய் தெரிய வருகிறதினாலே, பிரேதத்தை
அடக்கஞ்செய்ய உத்தரவு கொடுக்கவு
ம் இந்த அர்சியில் அடக்கஞ் செய்திருக்கி
விலலேசு மாஜிஸ்திரேட்டு ரிபோர்ட்டிலுங்
ம் மாஜா நாமாவிஜூலும் தெரிய வருகி
து. சங்கதி சித்தமறியலாவதாய் மஹஜர்
செய்து கொண்டேன்.

1865 ௵ ஜூலை ௴ 31௳

புதுப்பாளையம் தங்களவிதேயன் X

No. 41.

தென்னாற்காடு ஜில்லா டிஸ்திரிக்
டு மாஜிஸ்திரேட்டாரவர்களாகிய மெஸ்
தர் சி டபிளியு ரீட்துரையவர்கள்
சமுகத்துக்கு.

கோட்டூர்த்துகுடி உ. வது.

னால் ரிபோர்ட்டு கேட்டு மாஜிஸ்திரேட்டு ரு க்மகாத்முதலியார் எழுதிக் கொண்ட அர்ஜி யென்ன வென்றால்

இக்கக்ஷிகளுடைய உபயவாதி வில்லேஜ் மாஜிஸ்திரேட்டினால் காணுதம ஷீ—காசில் பெருக்கெழுதிக்கொள்ளப்பட்டு, அவனால் ரிபார் செய்யப்பட்ட 79. நம்பர் ரிபோர்ட்டு. 1. அதுவிதையகை பயமதிவி சாரணை நடக்கிய என்முன்பாகக்குடுக்க ள் கொடுக்க மாஜர். 1. இவவிரண்டையும் இகிலடக்கத்செய்து சமுகத்துக்கு அனு ப்பி யிருக்கிறேன். X

அவைகளால் மேற்படி உபயவ வாடிக்கு வடக்கு. பெண்வணயுறு முக குயவாரம் கெண்ணணை போரக்கில் ஒரடி ஜலக்கில் 30 வயதுள்ள ஒரு புருஷ னிறந்து கிடக்கிறதாயும் அக்க

திரேகம். body
([illegible])

ப்பிரேதத்தின் பேரில் அம்புக்குறிகளில்லா
மல், அதின் உதடு முக்கிய சிலவிடங்களி
ல் மீன்கள் கொத்தியும் திரேகம் அழுகிப்
போயிருப்பதாயும் தெரிய வருகிறது. அவ
னுடைய பேர் ஊர். வகைரா தெரியவில
லை. அவன் பாட்டை சாரியாய் வந்து
கொண்டு அல்லது சாராயங் குடித்து போ
தை கொண்டோ அல்லது வேறு எந்
த காரணத்தினாலேயோ அவ்விடம் போ
ய் விழுந்து இறந்து போயிருக்கலா
மென்று தோன்றுகிறது.

அவன் யாதொரு பொருளும்
வைத்திருக்கவில்லை யென்றும் தெரிய
வருகிறது.

நான் மேற்படி பிரேதத்தை
ப்பார்வையிட்டதில் மேற்கண்ட காய
ங்களால் மரணமடைந்திருக்கலாமென்று

காணப்படுகிறதேதவிர பிறருடைய பதிலுப
கரால் இறக்கராகக் கோண்டவில்லை.

ஆகையால் சங்கதி விதிகமாக
மனுவு செய்து கொண்டேன்.

1865ளு அக்டோபர் மீ 31உ.

புதுப்பாளையம். தங்கள் விதேயன

No. 42.

தென்னாற்காடு ஜில்லா டிஸ்டிரிக்
ட் மாஜிஸ்திரேட்டாராகிய. ஜார்ஜ். பான்
புரி துரையவர்கள் சமுகத்துக்கு

கூடலூர் தாலூகா. உ. வந்து வ
துபடி சபார்டினேட்டு மாஜிஸ்திரேட்டு
கோவிந்தராவு எழுதிக் கொண்ட அர்ஜி.

தாலூக்கு மஜ்கூர் சாக்கல் செ
ன்னப்பனுடைய பாளையத்திலிருக்கும் கை
ம்பெண்சாதி சிவகாமி யென்பவள் கண்

மையன் குறிஞ்சிபாடி குப்பத்திலிருக்கும்
சபாபதி முதலி வீட்டுக்குப் போயிருக்கா
யும் அப்போது அவனுக்கு கண்ட சூலை
நோய் கொண்டதனாலும், மேற்படியூர்
நாகப்பமுதலி வீட்டு திண்ணையில் விழுந்து
தற்கொலை செய்து கொள்ள எத்தனப்
பட்டதாகவும், அவனை கச்சேரிக்கு அ
னுப்பியதாகவும் மேற்படியூர் வில்லே
ஜு மாஜிஸ்திரேட்டு வைத்தியநாதய்யங்கார்
எழுதிய ரிபோர்ட்டு வந்ததின் பேரில்,
சிரஸ்தேதார் விசாரணை நடத்தியிருக்
கார் அதை இப்போது பூர்த்தி செய்து
அதைச் சேர்க்க தஸ்தாவேஜுகளாகிய
மேற்படி வில்லேஜு மாஜிஸ்திரேட்டு ரி
போர்ட்டு. உ. குறிஞ்சிபாடி ஸ்டேஷன்
ஆபீசர் ரிபோர்ட்டு. க. மேற்படி
சிவகாமி அம்மாள் சபாபதிமுதலியாக

த்தூலம். க. மேற்படி ஸ்டேஷன் நயி
ட்டர். வைத்தியாசாரி வாகத்தூலம். க.
872. வது நம்பர் கான்ஸ்டேபில் தாண்ட
வராய முதலி வாகத்தூலம். க. மஞ்சத்துப்ப
த்திலிருக்கும் டாக்டர் துரை கொடுத்த
சர்டிபிகேட்டு. க. ஆக கதா. எ. யுமி
திலட்டகைத் செய்து சமுகத்து பார்வை
க்கனுப்பி யிருக்கிறேன். ×

ஜைக்கிள ஊரி. ௧௦. வயதுள்ள மே
ற்படி சிவகாமியை மேற்படி விலலேக்ஷ
மாஜிஸ்ட்ரேட்டு வகைரா அவள் தமை
யன் முன்னிலையில் வண்டியில் ஏத்தி நா
ளது மீ உக நாழிகைக்கு. உ. மணிக்கு தாலூக்
காவுக்கு அனுப்பினதாகவும், வரும் பேரது
மார்க்கத்தில். 10. வது மயில் கல்லணை மே
ற்படி உயக்கிராவக்கால் வாந்தியெடுத்
து அயமா. ௪. மணிக்கு இறந்து போயவி

டடதாயும், சிலர்கோர் முதலானவர்
கள் பிரேதத்தைக் கண்டு உடனே டி
வ் பெண் சேர்த்து அழைப்பி பரிசோதிப்பி
த்ததில், அவள் வயற்று வலியால் இறந்
து போனதாக டாக்டர் துரை சர்டி
பி கேட்டு கொடுத்ததாயும், பிரேதத்தி
ன் மேல் துன்பத்திகளில்லாமையினால்
அடக்கஞ் செய்யும்படி உத்தரவு கொ
டுத்திருப்பதாயும், மேற்படி தஸ்தாவே
ஜுகளினால் தெரிய வருகிற சங்கதி
க்கு மறியலாவதாய முறைவு செய்து
